# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப்பரீட்சை - 2019

| | | |
|---|---|---|
| தரம்: 09 | சைவநெறி | நேரம்: 2.30 மணித்தியாலம் |

சுட்டெண்:............................................................................. 12 T I

**கவனிக்க:**

I.எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

### பகுதி – I

**மிகவும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக**

01. சைவசமயத்தின் முழுமுதற் கடவுள்
   i) சிவபெருமான் iii) திருமால்
   ii) முருகப்பெருமான் iv) பிரமா

02. திருஞானசம்பந்தரது பஞ்சாட்சரப் பதிகம் இடம் பெறுவது
   i) முதலாம் திருமுறை iii) மூன்றாம் திருமுறை
   ii) இரண்டாம் திருமுறை iv) நான்காம் திருமுறை

03. சிவபெருமான் மன்மதனை எரித்த தலம்
   i) திருநல்லூர்ப் பெருமணம் iii) திருவாரூர்
   ii) திருகுறுக்கைவீரட்டம் iv) திருப்பாண்டிக்கொடுமுடி

04. நாலுக்கவிப்பெருமாள் என்று சிறப்பிக்கப்படுபவர்
   i) திருமங்கையாழ்வார் iii) நம்மாழ்வார்
   ii) குலசேகராழ்வார் iv) மதுரகவியாழ்வார்

05. இறைவனைத் தோழனாகக் கொண்டு பக்தி செய்யும் நெறி
   i) சரியை iii) யோகம்
   ii) கிரியை iv) ஞானம்

06. அட்டாங்க யோகங்களில் தாரணை குறிப்பது
   i) தீயவற்றை விலக்கல்
   ii) நல்ல காரியங்களைச் செய்தல்
   iii) மூச்சைக் கட்டுப்படுத்துதல்
   iv) மனதை கடவுள்பால் செலுத்துதல்

07. மகரஜோதி தரிசனம் தெய்வீக அனுபவமாகக் கிடைக்கப் பெறுவது
   i) திருவண்ணாமலை iii) சுவாமிமலை
   ii) சபரிமலை iv) திருகோணமலை

08. திருத்தொண்டர் திருவந்தாதி பாடியவர்
   i) சேக்கிழார் iii) நாவுக்கரசர்
   ii) சுந்தரர் iv) நம்பியாண்டார் நம்பி

kalvi.lk

09. ஆவணி மாதத்துப் பூரணையைத் தீர்த்த உற்சவமாகக் கொண்டு பதினைந்து நாட்கள் மகோற்சவம் நடைபெறும் ஆலயம்
i) திமிலைத்தீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயம்
ii) செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்
iii) தாந்தாமலை முருகன் ஆலயம்
iv) வண்ணை வரதராஜப்பெருமாள் ஆலயம்

10. முக்குணங்கள் எனப்படுபவை
i) ஆணவம், கன்மம், மாயை
ii) பதி, பசு, பாசம்
iii) தாமசம், இராஜசம், சாத்விகம்
iv) சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம்

11. இந்தியாவில் தசரா என்னும் பண்டிகையாகக் கொண்டாடப்படும் விரதம்
i) கேதாரகௌரிவிரதம்
ii) ஆவணிச் சதுர்த்தி
iii) ஆடிப்பிறப்பு
iv) நவராத்திரி விரதம்

12. சித்தாந்த சிகாமணி என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்
i) அருணாசலதேசிகர்
ii) திருமூலர்
iii) அவிநாசாநந்த அடிகளார்
iv) அருணகிரிநாதர்

13. சைவசமயத்தின் சிறப்பு நூல்
i) வேதம்
ii) ஆகமம்
iii) திருமுறை
iv) உபநிடதம்

14. "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவார்" இவ்வடிகள் இடம்பெறுகின்ற நூல்
i) திருமந்திரம்
ii) சிவஞானசித்தியார்
iii) திருப்பல்லாண்டு
iv) பெரியபுராணம்

15. தமிழ் நாட்டில் நலிவுற்றிருந்த சைவத்தை மீண்டும் தழைத்தோங்கப் பெரும்பணியாற்றியவர்
i) திலகவதியார்
ii) குலச்சிறையார்
iii) மங்கையக்கரசியார்
iv) பாண்டிமாதேவியார்

16. செல்வச்சந்நிதி ஆலயத்தின் தீர்த்தம்
i) சுவர்ண புஷ்கரணி
ii) துர்வாச சாகரம்
iii) தொண்டைமானாறு
iv) பாவநாசம்

17. "நையாத மனத்தினனை" எனத் தொடங்கும் திருவிசைப்பாவைப் பாடியவர்
i) சேந்தனார்
ii) கருவூர்த்தேவர்
iii) சேதிராயர்
iv) திருமாளிகைத் தேவர்

18. "ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை" என்ற பாடலைப் பாடியவர்
i) விபுலாநந்தர்
ii) ஆறுமுகநாவலர்
iii) நவாலியூர்சோமசுந்தரப்புலவர்
iv) நாவுக்கரசர்

19. கரணம் என்பது
i) ஒரு திதியின் கால் பங்கு
ii) ஒரு திதியின் அரைப்பங்கு
iii) ஒரு திதியின் முக்கால் பங்கு
iv) ஒரு திதியின் முழுப்பங்கு

20. இறந்த தந்தையின் பொருட்டு அனுஷ்டிக்கப்படும் விரதம்
i) பௌர்ணமி
ii) சித்திரா பௌர்ணமி
iii) பூரணை
iv) ஆடி அமாவாசை

(20 X 2 = 40 புள்ளிகள்)

Education கல்வி

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப்பரீட்சை - 2019


| | | |
|---|---|---|
| தரம்:09 | சைவநெறி | நேரம்: 2.30 மணித்தியாலம் |

சுட்டெண்:................................................................................................ | 12 | T | II |

**கவனிக்க:**

I. முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி – II

**01. சுருக்கமான விடை தருக.**

1) உள்ளத்திற்கு ஒளியைத் தருகின்ற விளக்கு எது?
2) காப்பதோர்...... என்ற தேவாரத்தில் போற்றப்படும் அடியார் யார்?
3) முதலாழ்வார்கள் எனப்படுவோர் யாவர்?
4) பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கு சிறப்புப் பெற்ற தலங்கள் 3 தருக?
5) திருப்பாண்டிக்கொடுமுடி என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவன், இறைவி பெயர் யாது?
6) நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தைப் தொகுத்தவர் யார்?
7) பயந்த தனிவழிக்குத் துணையாவது யாது?
8) பாண்டியநாட்டில் சமணசமயம் நிலவியபோது ஞானசம்பந்தர் எழுந்தருளியிருந்த இடம் எது?
9) ஐயனாருக்குரிய வேறுபெயர்கள் 2 தருக?
10) “இந்தச்சரீரம் எமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்” எனக் கூறியவர் யார்?

(10 X 2 = 20 புள்ளிகள்)

02. பின்வரும் திருமுறைப் பாடல்களுள் **இரண்டினை**
   1) அடிமுறை பிழையாது எழுதுக.
   2) பாடியவர் பெயர், தலம் என்பவற்றைத் தருக.

   அ) “மற்றுப் பற்று எனக்கு இன்றி........”
   ஆ) “மங்கையர்க்கரசி வளர்வர்கோன்.......”
   இ) “நையாத மனத்தினனை........”
   ஈ) “சொல்லாண்ட சுருதிப்பொருள்......”
   உ) “ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள.....”

(6 + 1 + 1 = 8 X 2 = 16 புள்ளிகள்)

kalvi.lk

03. “விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே”

1) அன்பே சிவம் எனக் கூறும் நூல் எது?
2) சரியை நெறியில் நின்று இறையருள் பெற்றவர்கள் யாவர்?
3) சன்மார்க்கம் என்றால் என்ன?
4) கிரியை வழிபாடுகள் மூன்று கூறுக?

(1 + 2 + 2 + 3 = 8 புள்ளிகள்)

04. “கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்”

1) இலங்கையில் இன்றுள்ள கோயிற் கட்டிடங்களுள் மிகத் தொன்மையானது எது?
2) போரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயத்தில் விசேடமாக நடைபெறும் வைபவம் யாது?
3) கதிர்காமப் பாதயாத்திரையை மேற்கொண்ட ஈழத்துச் சித்தர்கள் யாவர்?
4) தாந்தாமலை முருகன் ஆலய வரலாற்றில் இந்திரவிழா எனக் குறிப்பிடப்படும் நிகழ்வு பற்றி விளக்குக.

(1 + 2 + 2 + 3 = 8 புள்ளிகள்)

05. “யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்”

1) தமிழகத்தில் காத்தவராயன் யாருடைய அவதாரமாகக் கருதப்படுகிறார்?
2) பெரியதம்பிரான் பற்றிய கதைகளில் அவரோடு தொடர்புபடும் வகையில் அமையும் கடவுள் யார்?
3) சிறுதெய்வங்களைக் குறிக்கும் வேறுபெயர்கள் எவை?
4) ஐயனாரது அவதாரம் பற்றிப் புராணங்கள் எவ்வாறு கூறுகின்றன?

(1 + 2 + 2 + 3 = 8 புள்ளிகள்)

06. “வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்”

1) உலகத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாக அமைவது எது?
2) மூவகை வினைகளும் எவை?
3) ஆன்மாக்களின் இலட்சியமாவது யாது?
4) மூலமலத்தின் பிடியிலிருந்து விடுபட நாம் செய்யவேண்டியது என்ன?

(1 + 2 + 2 + 3 = 8 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றில் **இரண்டினைப்** பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

1) ஆவணிச் சதுர்த்தி
2) சரியைத் தொண்டு
3) அருணாசல தேசிகர்
4) ஐயனார் வழிபாடு
5) மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்

(2 X 4 = 8 புள்ளிகள்)

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457